


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) கொளத்தூர், ஜி.கே.எம். காலனி, 24A அம்மன் கோவில் தெரு பூங்கா பகுதியில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியம் சார்பில் 12 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) கொளத்தூரில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் இராஜா தோட்டம் திட்டப்பகுதியில் 27.71 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 162 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து, அக்குடியிருப்புகளைப் பார்வையிட்டு, பயனாளிகளிடம் கலந்துரையாடினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உள்ளார்.

## மாநில கல்விக் கொள்கையை ஆசிரியர்கள் தெரிந்திருக்க வேண்டும்!

# கல்வியையும் - மருத்துவத்தையும் இரு கண்களாகக் கருதுகிறார் முதல்வர்!

### கன்னியாகுமரியில் – அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி பேச்சு!

சென்னை, ஆக. 26-

முதலமைச்சர் அவர்கள் கல்வியையும், மருத்துவத்தையும் இரு கண்களாக பார்க்கிறார்கள் என்று கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் தலைமை ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசுகையில் குறிப்பிட்டார்.

கன்னியாகுமரி மாவட்ட பள்ளிக்கல்வித்துறை சார்பில் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி கலையரங்கில் தலைமை ஆசிரியர்களுடனான கலந்தாய்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, தலைமையில் நேற்று (25.08.2025) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டு தலைமை ஆசிரியர்களுடன் கலந்துரையாடி பேசுகையில்- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க கன்னியாகுமரி மாவட்டத் திற்குட்பட்ட அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தொடக்க நிலை கல்வியில் மாணவர்கள் அடைந்துள்ள கற்றல் அடைவினை அறிந்து கொள்வதற்காக மூன்றாம் வகுப்பு, ஐந்தாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மாநில அரசால் அடைவு தேர்வு நடத்தப்படுகிறது. ஆங்கிலத்தில் SLAS (State level Achievement Survey) எனப்படும் இத்தேர்வினை தமிழ்நாடு அரசு அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் நடத்துகிறது.

**கற்பித்தல் அணுகு முறை மாற்றி அமைப்பு!**

அந்தந்த வகுப்புகளில் மாணவர்கள் பெற்றிருக்க வேண்டிய அடைவு திறன், முழுமையான முறையில் மாணவர்கள் பெற்றுள்ளார்களா என சோதிப்பதற்காகவும், மாணவர்களின் கற்றலின் இடையே காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்காகவும், கற்றல் கற்பித்தலில் குறிப்பிட்ட இலக்கினை வரையறுப்பதற்காகவும், மாவட்டங்கள் இடையே மாணவர்கள் பெற்றுள்ள



அடைவினை ஒப்பீடு செய்வதற்காகவும், இத்தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இத்தேர்வுகளில் மாணவர்கள் பெற்ற மதிப்பீடுகளைப் பொறுத்து இனிவரும் காலங்களில் பாடத்திட்டம் வடிவமைத்தல், கற்பித்தல் அணுகுமுறைகளை மாற்றி அமைத்தல், ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஆகியவை திட்டமிடப்பட உள்ளன.

மேலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி சதவீதத்தில் அதிக அக்கறை காட்டுகிற நாம், தொடக்க நிலை வகுப்பு மாணவர்களின் கற்றல் தேர்ச்சியிலும் அக்கறையோடு, ஆசிரியர்களின் பங்களிப்பு முழுமையாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் நடைபெறும் இத்தேர்வு, நமது மாவட்டத்திற்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் நடைபெற்றது. மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கான அடைவு தேர்வு 04.02.2025 அன்றும், ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான அடைவு தேர்வு 05.02.2025 அன்றும், எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கான அடைவு தேர்வு 06.02.2025 அன்றும் நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் SLAS தேர்வு 517 அரசு பள்ளிகள், 292 அரசு உதவி பெறும் பள்ளிகள் என மொத்தம் 809 பள்ளிகளுக்கு நடைபெற்றது. இந்த தேர்வில் 3, 5 மற்றும் 8-ம் வகுப்பை சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு நடத்தப்பட்டது. அதன்படி நமது மாவட்டத்தில் 8506 மாணவியர்களும், 8581 மாணவர்களும் தேர்வு எழுதினார்கள். இதில் 66.55 சதவீதம் பெற்றுள்ளது. இந்த தேர்வை தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாவட்டங்களை சேர்ந்த 9 லட்சத்து 80 ஆயிரம் மாணவர்களுக்கு நடத்தப்பட்டுள்ளது. அதில் கன்னியாகுமரி மாவட்டம் முதலிடத்தை பிடித்தது பெருமையாக உள்ளது. அதற்காக உழைத்த தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தக்கலை, திருவட்டார், குருந்தன்கோடு, கிள்ளியூர், இராஜாக்கமங்கலம், அகஸ்தீஸ்வரம், மேல்புறம், தோவாளை உள்ளிட்ட வட்டார கல்வி நிலையங்கள் SLAS தேர்வில் நல்ல தரநிலையில் உள்ளனர். ஆனால் முன்சிறை வட்டம் தரநிலையில் பின்தங்கி உள்ளது. எனவே மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் தனிகவனம் செலுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இந்த தேர்வு தொடர்பான ஆய்வு கூட்டம் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டமாக நான் நடத்தி வருகிறேன். 22-வது மாவட்டமாக கன்னியாகுமரியில் இன்று ஆய்வு நடத்துகிறேன்.

**234 தொகுதிகளிலும் நேரடி ஆய்வு!**

மேலும் 234 தொகுதிகளுக்கும் நேரடியாக நான் சென்று ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு என்னென்ன தேவைப்படுகிறது என்ற விவரங்களையும் கேட்டறிந்து வருகிறேன். நான் தமிழ்நாட்டிற்குட்பட்ட பல்வேறு இடங்களுக்கு ஆய்வில் செல்லும் போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரு பள்ளியில் கணித மரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் அனைத்து கணித சூத்திரங்கள் எழுதி தொங்க விடப்பட்டுள்ளது. இந்த புதுமையான யோசனை குறித்து அடிக்கடி பேசுவேன். பெற்றோர்களின் நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் நம் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் ஆசிரியர்கள் தனி கவனம் எடுத்திட வேண்டும். தொடர்ந்து ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வி புகுட்டுவதில், பல்வேறு புதுமைகளை புகுத்த வேண்டும். முதலமைச்சர் அவர்கள் கல்வியையும், மருத்துவத்தையும் இரு கண்களாக கருதுகிறார்கள். நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 12ம் வகுப்பு தேர்வில் தமிழ்நாடு அளவில் 97.01 சதவீதம் பெற்று 5வது இடமும், அதே போன்று 10 வகுப்பு தேர்வில் 96.24% தேர்ச்சி பெற்று தமிழ்நாடு அளவில் 4வது இடம்பிடித்துள்ளது மிகவும் பெருமைக்குரியது.

தமிழ்நாடு அரசு வகுத்துள்ள மாநில கல்விக் கொள்கை குறித்து அனைத்து கல்வி பிரிவினரும், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் முழுவதுமாக தெரிந்து கொள்ள வேண்டும். கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கல்வித்தரம் பல மடங்கு உயர்ந்துள்ளது. தகவல் தொழில்நுட்பம், ஏ.ஐ. உள்ளிட்டவற்றில் ஆசிரியர்கள் தங்களை காலத்திற்கு ஏற்ப மேம்படுத்தி கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு பாடங்கள் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் அவர்களுக்கு நன்றாக புரிய வைக்க வேண்டும். அந்த பாடங்களையும் மாணவர்கள் உள்வாங்கி புரிந்து கொண்டு படித்திட ஆசிரியர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 10-ம் வகுப்பு, 12-ம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் தேர்ச்சி விகிதம் 100 சதவீதம் இலக்கை எட்ட வேண்டும். அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள் அதற்கான முழு முயற்சியினையும் மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பள்ளி கல்வித்துறை அமைச்சர்அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி, தேரூர் ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர்சுந்தரராஜன், மாவட்ட கல்வி அலுவலர்கள் ஜெயராஜ் (இடைநிலை), திருமதி.ஷெர்லின் விமல் (மார்த்தாண்டம்), திருமதி.ரமா (தொடக்க கல்வி), திருமதி.அஜிதா (தனியார்), மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்முருகன், வட்டார கல்வி அலுவலர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# அ.தி.மு.க. - பா.ம.க., த.வெ.க. உள்பட 200 பேர் கழகத்தில் இணைந்தனர்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

காஞ்சிபுரம், ஆக. 26-

அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த இளைஞர்கள் தி.மு. கழகத்தில் இணையும் நிகழ்ச்சி உத்திரமேரூர் அடுத்த சாலவாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அலுவலகத்தில் நேற்று காலை நடந்தது.

இதில் சாலவாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட , குண்ணவாக்கம், பாண்டவாக்கம், வெண்டிவாக்கம், படூர், அமராவதி பட்டினம், அருங்குன்றம், புலிப்பாக்கம், ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த, அதிமுக கிளைக் கழகச் செயலாளர்கள் சங்கர், பார்த்திபன், பாஸ்கர், தங்கராஜ், பிரகாஷ், செல்வம், தலைமையில் 100க்கும் மேற்பட்டோர், அதிமுக மகளிர் அணி நிர்வாகிகள் கோகிலா, மீனா, தலைமையில் 50க்கும் மேற்பட்டோர், பாமக ஒன்றிய செயலாளர் நரேந்திரன், அஜய், அமர்நாத், குப்பன், தலைமையில் 200க்கும் மேற்பட்டோர், புரட்சி பாரதம் கட்சியை சேர்ந்த ஞானவேல், செல்வம், தலைமையில் 10திற்கும் மேற்பட்டோர், தவெக கட்சியை சேர்த்த நிர்வாகிகள், புருஷோத்தமன், பார்த்திபன், சதீஷ், தலைமையில் 20க்கும் மேற்பட்டோர், நாம் தமிழர் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் சேட்டு, ராஜன், அஜித், தலைமையில் 20திற்கும் மேற்பட்டோர் என மொத்தம் 200க்கும் மேற்பட்டவர்கள் அவர்களது கட்சியிலிருந்து விலகி காஞ்சி மாவட்ட கழக செயலாளரும், உத்திரமேரூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான க.சுந்தர் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

மேலும், கட்சியில் புதிதாக இணைந்தவர்களுக்கு திமுக கட்சியின் சால்வை அணிவித்து காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் எம்.எல்.ஏ. வரவேற்று பேசுகையில், அ.தி.மு.க. பா.ம.க. ஆகிய கட்சியிலிருந்து விலகி கழகத்தில் இணைந்துள்ளீர்கள் அதற்கு முதலில் வாழ்த்துக் கள் மகிழ்ச்சி, பெயர் விலாசம் ஆதார் அட்டை ஆகிய படியல்களை பெற்று விரைவில் திமுக உறுப்பினர் அட்டைபெற்று தரப்படும் என பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், சாலவாக்கம் ஒன்றிய செயலாளர் டி.குமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவராமன், ஊராட்சி மன்ற தலைவர்கள்சத்யா சக்திவேல், உள்ளிட்ட ஒன்றிய கோதண்டராமன், வெங்கட்ராமன், நந்தா, யோகானந்தம், முரளிதரன், பாலமுருகன், விஷ்ணு, ரமேஷ், வெங்கடேசன், இளங்கோவன், மணி, வீரபாண்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில், செந்தமிழ்ச்செல்வர் –

# சி.வி.எம்.அண்ணாமலை அறக்கட்டளை சார்பில் காஞ்சிபுரத்தில் வேலைவாய்ப்பு முகாம்!

### அமைச்சர் ஆர்.காந்தி பணி ஆணைகளை வழங்கினார்! க.செல்வம், எம்.பி. தொடங்கி வைத்தார்!

காஞ்சிபுரம், ஆக. 26 -

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று, தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளந்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டுமென்பதற்காக, செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அறக்கட்டளை சார்பில், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினரும், செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அறக்கட்டளை மேலாண்மை இயக்குநருமான சி.வி.எம்.பி. எழிலரசன் ஏற்பாட்டில், 23.08.2025 அன்று காலை எஸ்.எஸ்.கே.வி. மேல்நிலைப் பள்ளியில், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே. ஆறுமுகம், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம். குமார், கழக செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், பகுதிக் கழக செயலாளர்கள் கே. திலகர், எஸ். சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ், காஞ்சிபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் திருமதி மலர்கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக்குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், மாவட்ட ஊராட்சிகுழு துணைத் தலைவர் திருமதி நித்யா சுகுமார், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, ஒன்றியக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் வேலைவாய்ப்பு முகாமினை துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்தோரை வரவேற்று, வேலைவாய்ப்பு முகாமின் நோக்கம் குறித்தும், திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு தொழில்துறையில் கண்டுள்ள வளர்ச்சி குறித்தும், அதனால் பெருகியுள்ள வேலைவாய்ப்பினை இளைஞர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் சிறப்புரையாற்றினார்.

வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு, கைத்தறிதுணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்கள் பணி ஆணை வழங்கி சிறப்பித்தார். முகாமில், 75க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் சார்பில் மனிதவள மேம்பாட்டு அலுவலர்கள் வருகைத் தந்து நேர்காணல் நடத்தினர். 1100க்கும் மேற்பட்டோர் முகாமில் பங்கேற்க பதிவு செய்து, நேர்காணலில் கலந்து கொண்டனர்.

வேலைவாய்ப்பு முகாமிற்கு வந்திருந்தவர்களுக்கு தேவையான வழிகாட்டுதலையும், உதவியையும் செய்ய தன்னார்வலர்களாக தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி தகவல் தொழில்நுட்ப அணி சார்ந்தவர்களும், Young India அமைப்பின் சார்பாக இளைஞர்களும், பச்சையப்பன் ஆடவர்/மகளிர் கல்லூரி, ஸ்ரீ சங்கரா கல்லூரி, எஸ்.எஸ்.கே.பி. மகளிர் கல்லூரி, காஞ்சி ஸ்ரீ கிருஷ்ணா கல்லூரி, திருமலை பொறியியல் கல்லூரி மாணவர்கள் உதவினர். அவர்களுக்கு முகாம் நிறைவடைந்தவுடன் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. நேர்காணலில் பங்கேற்றவர்களுக்கு குடிநீர், தேநீர், ஸ்நாக்ஸ், ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

வேலைவாய்ப்பு முகாம் சிறப்புடன் நடைபெற Skilled Jobs நிறுவனர் ராகவன் ராமு அவர்களும், செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அறக்கட்டளை சார்பில் சி.வி.எம்.பி.பார்வேந்தன், முனைவர் க. செல்வம், எ.க. ஆதித்தியன், எ.க.அகத்தியன், எஸ். எழில்குமார் உள்ளிட்டோர் அமைப்பாளர்களாக இருந்து நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

### பல்லாவரம் வடக்குப் பகுதி

# மாவட்டப் பிரதிநிதி குளத்துமேடு மு.நாகலிங்கம் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



பல்லாவரம், ஆக.26

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி கழகம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக பிரதிநிதி கழகத்தின் மூத்த முன்னோடி மான குளத்து மேடு மு. நாகலிங்கம் நேற்று (25.8.2025) இரவு 8.00 மணி அளவில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

காலம் சென்ற இவரது மனைவியும் அதைத்தொடர்ந்து வழக்கறிஞரான இவரது மகளும் பல்லாவரம் முன்னாள் நகர மன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள்.

இவர் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறைச்சென்றுள்ளார். கழகத் தோழர்களும் பொது மக்களின் அஞ்சலிக்காக இவரது உடல் பல்லாவரம் குளத்துமேடு பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மறைந்த மு.நாகலிங்கம் அவர்களுக்கு வெற்றிச்செல்வன் என்கிற மகனும் அமுதா என்கிற மகளும் உள்ளார்கள் .

# பெல் தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் பெல் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 239/TRI, பேரவை இணைப்பு எண்.298) நிர்வாகக் குழுக் கூட்டம் 16.08.2025 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணி அளவில் பெல் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூட்டுக் குழு போராட்டம் நடவடிக்கை செப்டம்பர் 20 ஆம் தேதி வரை நீடிக்க உள்ள நிலை இருப்பதால் செப்டம்பர் 20 ஆம் தேதிக்குப் பின்னர் அல்லது போராட்டம் முடிவுக்கு வரும் நிலை இருந்தால் அதற்குப் பின்னர் தேர்தல் நடத்துவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் செப்டம்பர் 20 ஆம் தேதிக்குப் பின்னர் பெல் தொ.மு.சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தல் பேரவையால் நியமிக்கப்படும் ஆணையாளரைக் கொண்டு நடத்தி முடிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| **கலைஞரகம்** | **(மு.சண்முகம்,)** |
| சென்னை-17 | பொதுச்செயலாளர், |
| நாள்: 25.08.2025 | தொ.மு.ச. பேரவை |



கழகப் பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி. ஆர். பாலு எம்.பி அவர்களின் துணைவியாரும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி.ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்திற்கு முன்னாள் அமைச்சரும் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான பொன் முத்துராமலிங்கம், தனது குடும்பத்தாருடன் நேரில் வந்து அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி முன்னாள் பூண்டி ஒன்றிய கழக செயலாளர் மூத்த முன்னோடி வேணுகோபால் அவர்கள் உடல நலகுறைவு எற்பட்டு வீட்டில் உள்ளார். அவரை மாநில தகவல் தொழில்நூட்ப அணி துனை செயலாளர் சி.எச்.சேகர் நேரில் சென்று சந்தித்து நலம் குறித்து விசாரித்தார். உடன் பூண்டி வடக்கு ஒன்றிய கழக் செயலாளர் எம்பொன்னுசாமி (எ) ஜான், முன்னாள் பூண்டி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் பெருஞ்சேரி பி. ரவி, ஒன்றிய துணை செயலாளர் தேவி, மாவட்ட பிரதிநிதி ரகு, முன்னால் ஊராட்சி பிரநிதி பூபாலன் தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் எஸ். ஞானமுத்து, பூண்டி வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் எஸ். தமிழரசன் ஆகியோர் உடன் இருந்தனர்.